**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு மே திங்கள் 19-ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 குரோதி வருடம் வைகாசி திங்கள் 05-ம் நாள்**

**S.T.C. No. 135/2025**
(குற்ற எண்.226/2024, தேவகோட்டை தாலுகா காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தேவகோட்டைதாலுகா காவல்நிலையம்,
குற்ற எண்.226/2024.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.முத்துமணி (72/2024)
க/பெ. சுப்பையா

…..எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>தேவகோட்டைதாலுகா<br>காவல்நிலையம்,<br>குற்ற எண்.226/2024. |
| 2. | எதிரிகள் | 1.முத்துமணி |

<table>
<tr><td></td><td></td><td colspan="4">க/பெ. சுப்பையா<br><u>முகவரி:</u><br>கொசவக்கோட்டை கிராமம், தேவகோட்டை தாலுகா.</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="4">எதிரி மீது பி.என்.எஸ் பிரிவுகள் 296(b), 115(2)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="4">21/09/2024</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="4">22/09/2024</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td rowspan="2">எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td colspan="2">30/09/2024</td><td colspan="2" rowspan="2">முன்பிணை பெற்ற நாள்:இல்லை</td></tr>
<tr><td colspan="2">30/09/2024<br>Bailed by Police</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="4">18/03/2025</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="4">22/07/2025</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="4">-----</td></tr>
<tr><td rowspan="2">10.</td><td rowspan="2">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td colspan="2">முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td colspan="2">23/02/2026</td><td>23/02/2026</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.2 | 23/02/2026 | 23/02/2026 |
| | | அ.சா.3 | 05/03/2026 | 05/03/2026 |
| | | அ.சா.4 | 05/03/2026 | 05/03/2026 |
| | | அ.சா.5 | 05/03/2026 | 05/03/2026 |
| | | அ.சா.6 | 12/03/2026 | 12/03/2026 |
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b)ன் கீழ் வினவிய நாள் | 16/03/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 22/07/2025 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 16/03/2026 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 19/05/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி பி.என்.எஸ் பிரிவுகள் 296(b), 115(2)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 278(1)-ன் கீழ்** | | |

| | | |
|---|---|---|
| | | **விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.சிவராமன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 21/09/2024 ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் சாட்சி 1 கண்ணங்குடியில் உள்ள சாட்சி 3 தர்மர் என்பவருடைய டீக்கடையின் முன்பு நின்றபோது அங்கு சென்ற எதிரி என் குடும்ப பிரச்சனையில் தலையிட வேண்டாம் என்று சாட்சி 1 சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு சாட்சி 1 ஐப் பார்த்து ஏண்டா சுண்ணி மயனே நீ என்ன பெரிய ஆளு புண்டையாடா என்று பொதுஇடத்தில் வைத்து அசிங்கமாகப் பேசியதாகவும், அதற்கு சாட்சி 1 எதிரியிடம் ஏன் இப்படி என்னை அசிங்கமாகப் பேசுற என்று கேட்டபோது நான் அப்படித்தான்டா பேசுவேன் புண்டாமவனே என்று மறுபடியும் அசிங்கமாக பேசி எதிரி கையில் வைத்திருந்த

களைக்கொட்டு கம்பால் சாட்சி 1ன் இடது பக்க நெற்றியில் அடித்து, கீழே தள்ளிவிட்டு நெஞ்சிலும் முதுகிலும் மிதித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக குற்றத்திற்காக எதிரி மீது பி.என்.எஸ் பிரிவுகள் 296(b), 115(2)-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பி.என்.எஸ்.எஸ் பிரிவு 230 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது பி.என்.எஸ் பிரிவுகள் 296(b), 115(2)-ன் கீழ் குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ 7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 கருப்பையா தனது சாட்சியத்தில் கடந்த 21.09.2024 ம் தேதி தன் பெரிய மகன் செந்திலுக்கும் தனக்கும் பிரச்சனை என்றும் அது சம்பந்தமாக கடந்த 21.09.2024 ம் தேதி மாலை 5 மணிக்கு கண்ணங்குடியில் உள்ள தர்மராஜ் டீக்கடையில் பேசிக் கொண்டிருக்கும்போது எதிரி முத்துமணி யாரைடா சொன்ன என்று சொல்லி தரக்குறைவாக கெட்ட வார்த்தைகளால் பேசி பின்னால் வைத்திருந்த களைக்கொட்டை எடுத்து தன் நெற்றியில் வெட்டிவிட்டார் என்றும் பின்பு தன்னை தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு தன் மகள் வசந்தி அழைத்து வந்தார் அங்கிருந்து தன்னை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள் என்றும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தேவகோட்டை தாலுகா போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் தான் உள்ள கொடுத்ததுதான் என்றும் அதில் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் (மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 வசந்தி தனது சாட்சியத்தில் கடந்த 21.09.2024 ம் தேதி மாலை 5 மணிக்கு கண்ணங்குடி தர்மன் டீ கடைக்கு பக்கத்தில் தான் கடையில் ஜாமான் வாங்கிக் கொண்டிந்தபோது சண்டை நடந்து முடிந்துவிட்டது என்றும் தான் வந்து பார்த்தபோது அ.சா.1 தலையில் ரத்தத்துடன் இருந்தார் என்றும் பின்பு அ.சா.1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன்

என்றும் அங்கிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள் என்றும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் போலீசார் தன் தந்தையிடம் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் மேற்படி அறிவேன் சாட் கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.5 வைரவசுந்தரம் தனது சாட்சியத்தில் 22.09.2024 ம் தேதி மதியம் 2 மணிக்கு கண்ணங்குடியில் உள்ள தர்மர் டீ கடை முன்பாக தேவகோட்டை தாலுகா போலீசார் அங்கு நடந்த குற்ற சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் வரைந்தார்கள் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் மேற்படி பார்வை மகஜர் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.6 கலைச்செல்வன் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலண்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆகவும், அ.சா.1ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் உள்ளதாக தெரிவித்திருந்தபோதிலும் எதிரி தரப்பு வழக்கறிஞரால் சாட்சிகள் இல்லை என்று மேலெழுத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 கடந்த 21/09/2024 ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு கண்ணங்குடியில் உள்ள தர்மராஜ் டீக்கடையில் பேசிக் கொண்டிருந்தபோது எதிரி முத்துமணி யாரைடா சொன்ன என்று சொல்லி தரக்குறைவாக கெட்ட வார்த்தைகளால் பேசி பின்னால் வைத்திருந்த களைக் கொட்டை எடுத்து தன் நெற்றியில் வெட்டி விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ.1 புகாரில் களைக்கொட்டு கம்பால் நெற்றியில் அடித்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அதிலிருந்து வேறுபட்டு அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் களைக்கொட்டை வைத்து வெட்டியதாக சாட்சியம்

அளித்துள்ளார். அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரியுடன் தன்னுடைய தாய் தகப்பன் காலத்திலிருந்தே வருத்தம் உள்ளது என்று சாட்சி அளித்துள்ளதும் கவனிக்கத்தக்கதாகும். இவ்வாறு அ.சா.1 க்கும் எதிரிக்கும் ஏற்கனவே பிரச்சனை உள்ள நிலையில் அ.சா.1 ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கில் இருந்து மாறுபட்டுள்ள நிலையில் அ.சா.1 சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக சாட்சியம் அமைய வேண்டியது அவசியமாக உள்ளது.

(8.2) இவ்வழக்கின் மற்றொரு சாட்சியான அ.சா.2 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தான் கடையில் ஜாமான் வாங்கிக் கொண்டிருந்தபோது சண்டை நடந்து முடிந்து விட்டதாகவும் தான் வந்து பார்த்தபோது அ.சா.1 தலையில் ரத்தத்துடன் இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ன் சாட்சியத்தில் இருந்து அ.சா.2 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தன்னுடைய கடைக்கு முன்பு சம்பவம் நடந்ததாக சொன்னார்கள் என்றும் தான் அப்போது கடையில் இல்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு கண்ணங்குடியில் உள்ள தர்மர் டீக்கடைக்கு முன்பாக டீ குடித்துக் கொண்டிருந்தபோது பகல் 2.00 மணிக்கு கருப்பையாவும் முத்துமணியும் அடித்துக் கொண்டார்கள் என்று பிறழ் சாட்சியாக

சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக இவ்வழக்கில் இதர சாட்சிகளும் அமையவில்லை. ஆகவே மேற்கண்ட முரண்பாடுகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்கையில் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே எதிரி சந்தேகத்தின் பலனைப் பெற தகுதி உடையவர் ஆகிறார்.

**9. முடிவாக, எதிரி பி.என்.எஸ் பிரிவுகள் 296(b), 115(2)-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 278(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மே திங்கள் 19-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.05.19 19:06:56 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | கருப்பையா | அ.சா.1 | புகார்தாரர் மற்றும் காயம்பட்ட சாட்சி |
| 2. | வசந்தி | அ.சா.2 | கேள்விப்பட்ட சாட்சி |
| 3. | தர்மர் (எ) தர்மராஜ் | அ.சா.3 | கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 4. | மாரியப்பன் | அ.சா.4 | கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 5. | வைரவசுந்தரம் | அ.சா.5 | பார்வை மகஜர் சாட்சி |
| 6. | கலைச்செல்வன் | அ.சா.6 | விசாரணை அதிகாரி |

**<u>Judicial Form No. 68</u>**

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| S.No of the exhibit | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | 23/02/2026 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | அறிவேன் சாட்சி கையொப்பம் | 23/02/2026 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | பார்வை மகஜர் | 05/03/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | முதல் தகவல் அறிக்கை | 12/03/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | பார்வை மகஜர் | 12/03/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |
| 6. | மாதிரி வரைபடம் | 12/03/2026 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | அ.சா.1 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் | 12/03/2026 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.05.19 19:07:03 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.